## சுருக்கம்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2010-11 – அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 மற்றும் பொங்கல் விடுமுறை நாட்களில் ஊரக விளையாட்டு போட்டிகளும் மற்றும் டிசம்பர் மாதத்தின் 2வது பிற்பகுதியில் ஊரக நூலகங்களில் நூலகப் போட்டிகளும் நடத்தி பரிசுகள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை

அரசு ஆணை (1டி) எண். 300 நாள்: 21.6.2010

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.49261/09/AGAMT–2, நாள் 11.5.2010.

* * * * *

**ஆணை:**

26.04.2010 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மான்யக் கோரிக்கையின் போது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றிக்கிடையே கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்.

> ‘பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 மற்றும் பொங்கல் விடுமுறை நாட்களில் 10,104 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராம ஊராட்சிகளில் 2010–2011–ம் ஆண்டில் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஊரக விளையாட்டு போட்டிகளும், ரூ.7 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஊரக நூலகங்களில் நூலகப் போட்டிகளும் சிறப்பாக நடத்தப்படும்”.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் 2010-11–ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் மேற்கண்ட போட்டிகள் நடத்தி பரிசு வழங்குவதற்கு கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை அரசுக்கு அனுப்பி ஒரு கிராம ஊராட்சியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான மொத்த செலவினம் ரூ.20,000/–க்கு மிகாமலும் (10,104X ரூ.20000= ரூ.20.208 கோடி) (ஒரு முறை நடைபெற்றால் அதன் செலவினம் ரூ.10,000/–க்கு மிகக்கூடாது) மற்றும் ஊரக நூலகப் போட்டிகள் நடத்திட ரூ.9,000/–க்கு மிகாமலும் (10,104Xரூ.9000=ரூ.9.09 கோடி) இருக்க வேண்டும் என்றும்,

இத்தொகை கிராம ஊராட்சி நிதி கணக்கிலிருந்து செலவிடப்படும் என்றும் தெரிவித்து வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுக்கும், கிராம ஊராட்சி நிதி கணக்கிலிருந்து செலவு செய்யவும் அரசின் ஒப்புதலை கோரி உள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, 2010-11–ஆம் ஆண்டில் 10104 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 மற்றும் பொங்கல் விடுமுறை நாட்களில் ஊரக விளையாட்டு போட்டிகளும் மற்றும் டிசம்பர் மாதத்தின் 2–வது பிற்பகுதியில் ஊரக நூலகங்களில் நூலகப் போட்டிகளும் நடத்த இந்த அரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்குவதற்கும், இதற்கென ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20,000/–க்கு மிகாமலும் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) (ஒரு முறை நடைபெற்றால் அதன் செலவினம் ரூ.10,000/–க்கு மிகக்கூடாது) மற்றும் ரூ.9,000/–க்கு (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) மிகாமலும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி நிதிக் கணக்கிலிருந்து முறையே ஊரக விளையாட்டு மற்றும் ஊரக நூலகப் போட்டிகள் நடத்துவதற்கு ஆகும் செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா. எண்.429/Secy (E)/10,. நாள் 28.05.2010–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
(இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்,
(ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக)
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை – 15.
மாநில தலைமை கணக்காயர், சென்னை –6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (தலைமைச் செயலகம்) சென்னை – 9.
சம்பளக்கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 5.
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள்.
நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்